1982 மார்ச் 5]

விற்பனை வரிச் சட்டத்தை மாற்றியமமக்கும் திட்டம்

* வினா எண் 365—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமி வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு வர்த்தகத் தொழில் துறை சங்கத்தில் இருந்து 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அரசுக்கு, விற்பனை வரி சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

(இ) விவரம் யாது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ, ஆ மற்றும் இ) துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வர்த்தகத் தொழிற்துறை சங்கத்தின் சார்பாக எந்த விதமான கோரிக்கையும் வரவில்லை. ஆனால், டெல்லியில் இருக்கிற இந்திய வர்த்தகத் தொழில் துறை சங்கத்தின் சார்பாக கோரிக்கை வந்து இருக்கிறது. அரசு அதைப் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, என்னென்ன கோரிக்கைகள் அதிலே அடங்கியிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற வரி விகிதத்தில் சில மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், பலமுனை வரியை நீக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். சர்சார்ஜை நீக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். கூடுதல் வரியை நீக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். இப்போது 50,000 ரூபாய் வரையில் விற்பனை செய்பவர்களுக்கு விற்பனை வரி இல்லை என்று உள்ளதை ஒரு லட்ச ரூபாய் என்கிற அளவிற்கு உயர்த்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி பல கோரிக்கைகள் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, ஏன் அந்தக் கோரிக்கைகளை உடனடியாகச் செயலுக்குக் கொண்டு வரக் கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1982 மார்ச் 5

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, எவ்வளவோ கோரிக்கைகளை வைக்கிறார்கள். எல்லாக் கோரிக்கைகளையும் வந்தவுடனே நாம் நடைமுறைப்படுத்தினால் மக்களுக்கு எவ்வளவு நஷ்டம் அதனால் ஏற்படும் என்பதை எண்ணிப்பார்க்க முடியாமல் போய்விடும். மேலும், ஒரு கோரிக்கை வந்தவுடன் அதனால் சமுதாயத்திற்கு என்ன பலன் கிடைக்கும், அரசாங்கத்திற்கு என்ன சாதக, பாதகத்தை ஏற்படுத்தும் என்பதை ஆராய்ந்து பார்த்து, பின்னரே அதை நடைமுறைப் படுத்த வேண்டிய நிலையில் அரசு இருக்கிறது.

(முற்பகல் 9-20)

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவரவர்களே, இம்மாதிரி விற்பனை வரி சம்பந்தமாக பல்வேறு கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இந்த விற்பனை வரியை முழுமையாக விதிக்கின்ற முறை, வசூல் செய்கின்ற முறை, மற்றும் பல்வேறு தன்மைகளை ஆராய்ந்து பயனுள்ள வகையில் அரசுக்கு ஆலோசனை கூறுவதற்கு அதிகாரிகள், வியாபாரிகளுடைய பிரதிநிதிகள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழுவை அமைத்து, அதை பரிசிலிக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே கெய்வார் தலைமையில் ஒரு கமிட்டி போடப்பட்டது. அதில் வர்த்தக பிரதிநிதிகள் இருந்தார்கள். அதனுடைய சிபாரிசுகளில் ஏறத்தாழ 90 சதவீதத்தை அரசு நிறைவேற்றியிருக்கிறது. அது மட்டுமல்லாமல் அவ்வப்போது ஏற்படும் நிலைமைகளை ஆராய்வதற்கு மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு, அங்கே இருக்கிற வர்த்தக பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்களை உறுப்பினர்களாகக் கொண்டு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. மாநிலத்திலும் அப்படிப்பட்ட ஒரு கமிட்டி மாநில அளவில் இருக்கிறது. அதிலே வருவாய்த் துறை அமைச்சர் தலைவராகவும், அரசு செயலாளர், மாவட்ட, மாநில அளவில் இருக்கிற வர்த்தகச் சங்கப் பிரதிநிதிகள், சில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, விற்பனை வரியை அமுல்படுத்துவதுபற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு சிறு தீப்பெட்டித் தொழிலை நம்பி இலட்சக்கணக்கான மக்கள் இருக்கிறார்கள். அந்தத் தொழிலுக்கு உரிய 'பேசிக் மெட்டீரியல்சு'-க்கு வரி

1982 மார்ச் 5]

விலக்கு அளித்திருக்கிறார்கள். ஆனால் தீப்பெட்டி அட்டைகளில் ஒட்டுகிற 'ப்ளூ பேப்பருக்கு' சாத்தூர் தாலுகாவிலும் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகாவிலும் வரி விலக்கு அளிக்கவில்லை. அந்த வரியை நீக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : துணைத் தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்பு தற்போது என்னிடம் இல்லை. அதுபற்றி அரசு ஆராயும்.

அமராவதி நகரிலுள்ள "சைனிக்" பள்ளி

* வினா எண் 366—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அமராவதி நகரில் உள்ள 'சைனிக்' பள்ளிக்கு நமது மாநில அரசு என்னென்ன உதவிகள் செய்கிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அமராவதி நகரிலுள்ள சைனிக் பள்ளியில் பயிலும் தமிழக மாணவர்களுக்கு மாநில அரசு, படிப்பு உதவித் தொகை (ஸ்காலர்ஷிப்) வழங்கி வருகிறது. தவிர, இப் பள்ளிக்குத் தேவையான நிலம், கட்டிடங்களையும் மற்றும் மூலதனப் பொருட்கள் முதலியவை வாங்கு வதற்கு நிதியுதவியும் அளிக்கின்றது.

திரு. என். பழனிவேல் : துணைத் தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் அமராவதியில் இருக்கிற இந்த சைனிக் பள்ளி பொதுவாக மேல்தட்டு மக்கள் படிக்கிற பள்ளியாக இருக்கிறது. சாதாரண ஏழை எளிய மக்கள், குறிப்பாக தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் அந்தப் பள்ளியில் தலைவைத்துப் பார்க்க முடிய வில்லை. இம்மாதிரி உயர்ந்த வகுப்பு மக்கள் படிக்கின்ற அந்தப் பள்ளியில் சாதாரண ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுடைய குழந்தைகள் படிப்பதற்கு அரசு ஏதாவது தனி முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு துணைத் தலைவர்வர் களே, உயர்ந்த வகுப்பினருக்கு என்று ஆரம்பிக்கப்பட்ட பள்ளிக்கூடம் அல்ல அது. பாதுகாப்புத் துறையில் படைவீரர்கள், தளபதிகளாக மக்கள் வர வேண்டும். அதுவும் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் வர வேண்டும் என்பதற்காக அந்தப் பள்ளியிலே சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அங்கே படித்து, பயிற்சி பெற்றவர்கள் டிஃபன்ஸ் அக்கடமியில் தேர்ச்சி பெற்று, தளவாய்களாக வர வேண்டும்; தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிலே ஒரு பங்கை பெற